# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC . 22/2017 |
| Deposition of Witness for | Prosecution Pw 3 |
| Name | சண்முகம் என்ற சண்முகசுந்தரம் |
| Father / Husband Name | காமாட்சி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th January 2023.

---

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை கீழவளையம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் சிறப்ப வேலை செய்து வருகின்றேன். எங்களுக்கும், எங்கள் சித்தப்பா பழனி என்பவருக்கும் பொதுவான இடம் கீழவளையம்பட்டி போகும் வழியில் உள்ளது. அந்த இடம் சம்பந்தமாக எங்கள் குடும்பத்திற்கும், சித்தப்பா பழனி குடும்பத்திற்கும் பிரச்சனை உள்ளது. கடந்த 29.12.2014 ம் தேதி காலை 10.00 மணிக்குள் இருக்கும் என் அப்பா காமாட்சி காளையார்கோவில் சந்தைக்கு சைக்கிளில் சென்ற போது எதிரிகள் இருவரும் என் அப்பாவை தடுத்து நிறுத்தி பொது வயலில் கடலை போட்டிருந்தார்கள் அது சம்பந்தமாக என் அப்பாவை தேவடியா மகனே இன்னும் கொச்சையான வார்த்தைகளால் திட்டி என்அப்பாவை கம்பால் தோள்பட்டையிலும், தலையிலும் அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார்கள்.

2) சம்பவம் நடந்து கால்மணிநேரத்திற்குள் ஊர்க்காரர்கள் எனக்கு தகவல் சொல்லி நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று என் அப்பாவை சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். இது சம்பந்தமாக போலிசார் மருத்துவமனையில் வந்து விசாரணை செய்து ஸ்டேட்மண்ட் வாங்கிக்கொண்டார்கள். என்னை போலிசார் மருத்துவனையில் வைத்து விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1) என்னை போலிசார் எந்த தேதியில், எந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் 29.12.2014 ம் தேதி காலை 11.00 மணியிருக்கும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என் அப்பாவை நான் தான் மருத்துவமனைக்கு என் இருசக்கர வாகனத்தில் அழைத்துச்சென்றேன் என்றாலும், வேறு யாரும் வரவில்லையா என்றாலும் ஆமாம். என் அப்பா காயம்பட்டு கிடந்த போது வேறு யாரும் உடன் இருந்தார்களா என்றால் இல்லை நான் மட்டும் தான் இருந்தேன்.

2) எனக்கு யார் தகவல் சொன்னது என்றால் யார் என்று தெரியவில்லை கிராமத்துக்காரர்கள் சொன்னார்கள். நான் போகும் போது என் அப்பா எந்த இடத்தில் காயம்பட்டு கிடந்தார் என்றால் எங்கள் கிராமத்து கண்மாய் கழுங்கு அருகே கிடந்தார். இது சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். இன்றைய தேதி வரை எங்கள் குடும்ப சொத்துக்கள் அனைத்தும் பாகபிரிவினை செய்யப்படாமல் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.

3) பம்பு செட், கிணறு கிடையாது என்றால் சரிதான். என் அப்பா காலையில் 06.00 மணிக்கு காளையார்கோவில் சென்றால் இரவு 05.00 மணிக்குள் திரும்ப வருவார் என்றால் சரிதான். தினசரி அவ்வாறு தான் செல்வார் என்றால் சரியல்ல வேலை இருந்தால் தான் செல்வார். நாங்கள் அனைவரும் தனித்தனி குடும்பமாக உள்ளனர் என்றால் சரியல்ல நான் மட்டும் தனியாக இருக்கிறேன். என் அப்பா மீது பழனி காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னை விசாரித்த போலிசார் எந்த போலிசார் என்றால் ஆண் போலிசார் அவரின் பதவி பற்றி தெரியாது. என்அம்மா, அண்ணனுக்கு என் அப்பாவுக்கு காயம் ஏற்பட்டது சம்பந்தமாக நேரடியாக தெரியாது

என்றால் சரிதான்.

4) அவர்கள் எப்போது தெரிந்துகொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சிற்ப வேலை செய்வதால் வெளியூரில் தான் இருப்பேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், என் அப்பா சைக்கிளில் இருந்து தவறி விழுந்த காயத்தை வைத்து எங்களுக்குள் சொத்து சம்பந்தமான பிரச்சனை இருப்பதால் எதிரிகள் மீது பொய்யான வாக்குமூலம் அளித்ததாக சொல்லி போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க என் அப்பாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 11.01.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**